பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 08 2025 SUNDAY 7.15 PM
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகள் சுமூகமாக செயல்படாத பட்சத்தில் ஜனநாயகம் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.
- உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ், உலக அளவிலான உற்பத்தி முனையமாக இந்தியா உருவெடுத்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- சட்டீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் மறைத்து வைத்திருந்த பெருமளவிலான ஆயுதங்கள், வெடிபொருட்களை பாதுகாப்புப்படையினர் இன்று கைப்பற்றியுள்ளனர்.
- தமிழகத்தின் எந்த பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கான அனுமதி வழங்கப்படாது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.
- பதினேழு வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா *8-0* என்ற கோல் கணக்கில் பூட்டானை வென்றது.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<>>>>>>

நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகள் சுமூகமாக செயல்படாத பட்சத்தில் ஜனநாயகம் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் என்று

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில இன்று சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்று பேசிய அவர், எதிர்ப்பு தெரிவிப்பதற்கும், தடை ஏற்படுத்துவதற்குமான வேறுபாட்டை எதிர்க்கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

கடந்த மழைக்கால கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகளின் அமளியினால் ஏற்பட்ட ஒத்திவைப்புகளின் காரணமாக, விவாதத்திற்காக திட்டமிடப்பட்ட 120 மணிநேரத்தில் 84 மணிநேரத்தை நாடளுமன்றம் இழந்திருப்பதாக திரு கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

சீக்கிய புனித நூலான குரு Granth Sahib உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதை உணர்த்தும் Parkash Purab நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சேவை, இரக்கம், அன்பின் மதிப்பினை நினைவூட்டி உலகத்திற்கு ஒளியூட்டும் வகையில் குரு Granth Sahib காலத்திற்கு அப்பாற்பட்ட போதனைகளை வழங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

மக்களிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அவர்களை நல்வழிப்படுத்துவதாக இப்புனித நூல் அமைந்துள்ளது என்று பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ், உலக அளவிலான உற்பத்தி முனையமாக இந்தியா உருவெடுத்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், நாட்டில் உற்பத்தி கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், நாட்டின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களில் வளர்ச்சி செயல்பாடுகளை பெருக செய்யவும் இத்திட்டம் வகை செய்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இணைந்த நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை 16 புள்ளி ஐந்து லட்சம் கோடியை கடந்திருப்பதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

தேர்தல் ஆணையம் போன்ற அரசியலமைப்பு நிறுவனங்கள் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையற்று இருப்பதாக பிஜேபி-யின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ரவிசங்கர் பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.

பாட்னாவில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், கடந்த ஒன்றாம் தேதியன்று பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் வெளியிடப்பட்ட போதிலும், சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிரான

குறிப்பிடும்படியான ஆட்சேபனைகளை எதிர்க்கட்சிகள் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவித்தார்.

பீகார் வாக்காளர் பட்டியலில் இல்லாதவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், உயிரிழந்தவர்களின் பெயர்கள் குறித்த புகார்களை காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதளம் கட்சிகள் இதுவரை பதிவு செய்ய முன்வரவில்லை என்றும் அவர் கூறினார்.

தேர்தல் ஆணையத்துக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை இக்கட்சிகள் முன்வைப்பதாக திரு ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார்.

இதற்கிடையே, பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான ஆட்சேபணைகள், உரிமைக்கோரல்கள் தொடர்பாக இதுவரை 98 சதவீதம் வாக்காளர்களிடமிருந்து ஆவணங்கள் பெறப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அந்த ஆணையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், வாக்காளர்பட்டியல் திருத்தம் தொடர்பான ஆட்சேபனைகளை தெரிவிக்க இன்னும் எட்டு நாட்களே உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் உள்ள தவறுகளை களையவும், வாக்காளர்கள் முன்னர் வழங்க தவறிய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பும் தற்போது ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்துக்கு உட்பட்ட வனப்பகுதியில் மாவோயிஸ்டுகள் மறைத்து வைத்திருந்த பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை பாதுகாப்புப்படையினர் இன்று கைப்பற்றியுள்ளனர்.

அப்பகுதியில் மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக கிடைத்த உளவு தகவல்களின் அடிப்படையில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக இன்று காலை பெருமளவிலான ஆயுதங்கள், வெடிப்பொருட்கள், இரும்பினால் ஆன சாதனங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டதாகவும் பாதுகாப்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினருக்கு ஏதிரான மாவோயிஸ்டுகளின் திட்டம் இதன்மூலம் முறியடிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

< < < < < < > > > > > >

தமிழகத்தின் எந்த பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கான அனுமதி வழங்கப்படாது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மாநில நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் ஆய்வு மேற்கொள்ள ONGC நிறுவனத்துக்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், நேரடி அனுமதி வழங்கியுள்ளது மாநில அரசின் கவனத்திற்கு வந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அந்த அனுமதியினை உடனே திரும்பப்பெறுமாறு அந்த ஆணையத்தினை தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் தமிழகத்தின் எந்த பகுதியிலும் இத்திட்டங்களை செயல்படுத்த மாநில அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று திரு தங்கம் தென்னரசு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் தென்காசி உட்பட ஐந்து மாவட்டங்களில் மருத்துவக்கல்லூரி அமைக்குமாறு மத்திய அரசிடம் கோரி வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

தென்காசியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக பிரதமர் மற்றும் மத்திய சுகாதார அமைச்சரிடம், தமிழக அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் கடனுதவிகளை மத்திய அரசு வழங்கி வருகிறது.

இதன்மூலமாக பயனடைந்துவரும் சிறு-குறு நடுத்தர நிறுவனங்களை சார்ந்தவர்கள் சுதந்திர தினத்தன்று, குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் சூரிய மின்சக்தி தொடர்பான நிறுவனம் ஒன்றை நடத்திவரும் வினோத்குமார், இந்த கலந்துரையாடலில் பங்கேற்றது தம்மை பெருமிதம் கொள்ள செய்ததாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte – வினோத் குமார் – 40 Sec. )*

< < < < < < > > > > > >

ரஷ்யாவில் உள்ள அணு உலை பகுதிக்கு அருகே யுக்ரைன் நாட்டின் ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அந்நாடு கூறியுள்ளது.

இன்று அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், Kursk மண்டலத்தில் உள்ள அணு உலையில் ட்ரோன் ஒன்று வீழ்த்தப்பட்டதால் அங்கு சிறிய அளவில் தீ விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மண்டலத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகள் பல மாதங்களாக யுக்ரைன் வசம் இருந்துவரும் நிலையில், ரஷ்ய அரசு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மேலும், நேற்றிரவு ரஷ்ய வான்பரப்புக்குள் நுழைந்த யுக்ரைனை சேர்ந்த 95 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

< < < < < < > > > > > >

பதினேழு வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா *8-0* என்ற கோல் கணக்கில் பூட்டானை வென்றது.

பூட்டானின் திம்புவில் நடைபெற்ற இப்போட்டியில் *Anushka Kumari* ஹாட்ரிக் கோல் அடித்து சாதனை படைத்தார்.

-----------------

ஹைதராபாதில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா *5* தங்கம் மற்றும் *5* வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் *Rounak Chouhan* - தங்கப்பதக்கத்தையும், *Gnana Dattu* வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் ஒற்றையர் பிரிவில் *Shreyanshi*- தங்கப்பதக்கத்தையும், *Aikya Shetty* வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர், மகளிர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளிலும் இந்தியா தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

-----------

உலக மாஸ்டர்ஸ் நீச்சல் போட்டியில் இந்தியாவின் *Rohit Havaldar* வெள்ளிப்பதக்கம் வென்றார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் *200* மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் சீனியர் ஆடவர் *50* மீட்டர் பிரிவில் *Aishwary Pratap Singh Tomar* தங்கப்பதக்கம் வென்றார்.

ஜூனியர் ஆடவர் *50* மீட்டர் பிரிவில் *Adriyan Karmarkar* தங்கப்பதக்கம் வென்றார்.

இப்பிரிவில் இந்தியாவின் *Vedant Nitin* வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜூனியர் குழு பிரிவிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் *50* மீட்டர் குழு பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை *26* தங்கம், *9* வெள்ளி, *11* வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

-------------------------

ஜெர்மனியில் நடைபெற்ற உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள் பங்கேற்ற விளையாட்டுப் போட்டியில் இந்தியா *16* தங்கம் உட்பட *63* பதக்கங்களை வென்றது.

-----------

ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்காக ஜப்பான் அணி இன்று பாட்னா வந்து சேர்ந்தது.

இப்போட்டி வரும் *29*-ஆம் தேதி *Rajgir* -ல் தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>